JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.100/2020
PW.5

| பெயர் | செய்யது அப்துல் காதர் | தாலுகா | கடையநல்லூர் |
|---|---|---|---|
| தந்தை பெயர் | நூர்முகமது | தொழில் | டிரைவர் |
| கிராமம் | திரிகூடபுரம் | வயது | 34 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 04.06.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை

நான் தற்போது திரிகூடபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். சாட்சி திவான்சாகிப் என்பவரை எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கடந்த 2019ம் வருடம் விபத்து ஏற்பட்ட இடமான திரிகூடபுரம் பஸ்ஸ்டாப்பிற்கு போலிசார் வந்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் செய்து கொடுத்தேன் என்னுடன் யார் கையொப்பம் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அசாஆ.1 மற்றும் அசாஆ 2 ஆக குறியிடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 09.11.2019ம் தேதியன்று 12.45 மணிக்கு நானும், சாட்சி திவான் சாகிப் என்பவரும் வழக்கின் சம்பவ இடம் அருகே பேசிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த சொக்கம் பட்டி காவல் ஆய்வாளர் சொக்கம்பட்டி காவல்நிலைய குற்ற எண் 311/2019 வழக்கின் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், திவான் சாகிப் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. பின்னர் சம்பவ இடத்திலிருந்து வழக்கின் சொத்துக்களை

எங்கள் முன்பாக 13.30 மணிக்கு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது ஆஜர் எதிரிக்கு பயந்து கொண்டு பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.100/2020
PW.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மைதீன் பாத்திமா | தாலுகா | கடையநல்லூர் |
| கணவர் பெயர் | மைதீன் | தொழில் | பீ டி சுற்றும் வேலை |
| கிராமம் | திரிகூடபுரம் | வயது | 46 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 04.06.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது திரிகூடபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பீடிசுற்றும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. பட்டியல் சாட்சி 1 திவான் சாகிப் என்பவரை தெரியாது. அசா.1 திவான் மைதீன் என்பவரை தெரியாது. அசா.2 செய்யது அப்துல் காதர், அசா.3 ரசித்தாள் ஆகியோரை தெரியும். வழக்கில் இறந்து போன ஆயிஷா பானு, இர்பானா ஆசியா, கன்சால்மகரிபா ஆகியோர்களை தெரியும். கடந்த 6 வருடங்களுக்கு முன்பு ஆயிஷா பானு, இர்பானா ஆசியா, கன்சால்மகரிபா ஆகியோருக்கு வண்டியில் விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். நான் கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. ரோட்டில் விழுந்து விட்டார்கள் என கேள்விப்பட்டேன். பின்னர் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அவர்கள் இறந்து விட்டார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 09.11.2019 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் கொல்லம் முதல் திருமங்கலம் ரோட்டில் தெற்கிருந்து வடக்கு நோக்கி TN 84 G0012 என்ற பதிவெண் கொண்டபோலிஸ் பஸ்சை எதிரி அதிவேகமாகவும்,அஜாக்கிரதையாகவும்,

கவனக்குறைவாகவும் ஓட்டி திரிகூடபுரம் பஸ்ஸ்டாப் அருகே மேற்கு பக்கம் வேப்ப மரத்தடியில் பஸ்க்காக காத்து கொண்டிருந்த இந்த வழக்கில் இறந்து போன மூன்று பெண்களும் நின்று கொண்டிருந்த போது எதிரி போலிஸ் பஸ்சை கொண்டு மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் கேள்விப்பட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது ஆஜர் எதிரிக்கு பயந்து கொண்டு இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.100/2020
PW.3

| பெயர் | ரசிதாள் | தாலுகா | கடையநல்லூர் |
|---|---|---|---|
| கணவர் பெயர் | திவான் மைதீன் | தொழில் | கூலி வேலை |
| கிராமம் | திரிகூடபுரம் | வயது | 49 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 04.06.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது திரிகூடபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை நான் இன்று தான் நீதிமன்றத்தில் பார்த்துள்ளேன். பட்டியல் சாட்சி 1 திவான் சாகிப் என்பவரை தெரியும். அவர் இறந்து விட்டார். அசா.1 திவான் மைதீன் என் கணவர். அசா.2 செய்யது அப்துல் காதர் என்பவரை தெரியும். வழக்கில் இறந்து போன ஆயிஷா பானு, இர்பானா ஆசியா, கன்சால்மகரிபா ஆகியோர்களை தெரியும். கடந்த 6,7 வருடங்களுக்கு முன்பு இறந்து போன மூன்று நபர்களும் என்னிடம் சொல்லி விட்டு மருத்துவமனைக்கு செல்வதாக கூறினார்கள். ரோட்டில் விழுந்து விட்டார்கள் என கேள்விப்பட்டேன். பின்னர் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அவர்கள் இறந்து விட்டார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 09.11.2019 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் கொல்லம் முதல் திருமங்கலம் ரோட்டில் தெற்கிருந்து வடக்கு நோக்கி TN 84 G0012 என்ற பதிவெண் கொண்டபோலிஸ் பஸ்சை எதிரி அதிவேகமாகவும்,அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி திரிகூடபுரம் பஸ்ஸ்டாப் அருகே மேற்கு பக்கம் வேப்ப மரத்தடியில் பஸ்க்காக காத்து கொண்டிருந்த இந்த வழக்கில்

இறந்து போன மூன்று பெண்களும் நின்று கொண்டிருந்த போது எதிரி போலிஸ் பஸ்சை கொண்டு மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் கேள்விப்பட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது ஆஜர் எதிரிக்கு பயந்து கொண்டு இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.100/2020
PW.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செய்யது அப்துல் காதர் | தாலுகா | கடையநல்லூர் |
| தந்தை பெயர் | மீரா சாகிப் | தொழில் | கூலி வேலை |
| கிராமம் | திரிகூடபுரம் | வயது | 72 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 04.06.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது திரிகூடபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. பட்டியல் சாட்சி 1 திவான் சாகிப் என்பவரை தெரியாது. அசா.1 திவான் மைதீன் என்பவரை தெரியாது. வழக்கில் இறந்து போன ஆயிஷா பானு, இர்பானா ஆசியா, கன்சால்மகரிபா ஆகியோர்களை தெரியாது. நான் கூலி வேலைசெய்து கொண்டிருக்கிறேன். அண்டித்தோடு சாக்கை பண்டல் எடுத்து கட்டி கொண்டிருந்தேன். திரிகூடபுரத்தில் நான் என்னுடைய சைக்கிளைஇரண்டு கொடிமரங்களுக்கு நடுவே நிறுத்தி வைத்திருந்தேன். வேலையை முடித்து விட்டு வீட்டிற்கு கிளம்பும் போது அப்போது தெற்கே இருந்து போலிஸ் வண்டி ஒன்று வந்தது. முதலில் என்னுடைய சைக்கிள் மற்றும் திண்டை அடித்து விட்டது. அங்கு வடபுறம் வேப்ப மரம் இருந்தது. அதற்கு அடியில் 3 பெண்கள் இருந்தார்கள். வேப்ப மரத்தை முட்டி வடபுற்த்தில் உள்ள திண்டில் இடித்து டயர் வெடித்துவிட்டது. பின்னர் ஒரு வாரத்திற்கு பின்பு 3 பெண்கள் இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். போலிஸ் வண்டி ஓட்டிய நபர் யார் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 09.11.2019 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் கொல்லம் முதல் திருமங்கலம் ரோட்டில்

தெற்கிருந்து வடக்கு நோக்கி TN 84 G0012 என்ற பதிவெண் கொண்டபோலிஸ் பஸ்சை எதிரி அதிவேகமாகவும்,அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி திரிகூடபுரம் பஸ்ஸ்டாப் அருகே மேற்கு பக்கம் வேப்ப மரத்தடியில் பஸ்க்காக காத்து கொண்டிருந்த இந்த வழக்கில் இறந்து போன மூன்று பெண்களும் நின்று கொண்டிருந்த போது எதிரி போலிஸ் பஸ்சை கொண்டு மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது ஆஜர் எதிரிக்கு பயந்து கொண்டு இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi